முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.53/2020** **DW: 2** **22.06.2026**

2026 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் **22ம்** நாள் பிரதிவாதிதரப்பு 2ம் சாட்சியாகிய லோகநாதன் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லோகநாதன் | வயது | 74 |
| த/க. பெயர் | பெருமாள் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | ஆக்கனூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

<u>குறுக்கு விசாரணை</u>

வாதி மற்றும் பிரதிவாதியை எனக்கு தெரியும். வாதி தங்கராசு மற்றும் பிரதிவாதி ராமசாமி சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் துரைசாமி. வழக்குச் சொத்து சம்மந்தமாக ஏதேனும் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதிக்கு வேறு சகோதரர்கள் இருக்கிறார்களா என்றால் அய்யாகண்ணு என்ற ஒரு சகோதரர் உள்ளார்.

அய்யாகண்ணு பெயரில் வழக்குச் சொத்து சம்மந்தமாக கிரையம் ஏற்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வாதி தங்கராசு மற்றும் பிரதிவாதி ராமசாமி இடையே பதிவுச் செய்யப்பட்ட பாகப் பிரிவினை பத்திரம் ஏற்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அய்யாகண்ணு கிரையபத்திரத்திலும், மேற்படி பாக பிரிவினை பத்திரத்திலும் வழக்குச் சொத்திலுள்ள பாதை சம்மந்தமாக எழுதிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

வழக்குச் சொத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால் 31, 31 அடி மட்டும்தான் எனக்கு தெரியும், மற்ற விபரம் எனக்கு தெரியாது. வாதி எதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் பிரதிவாதி என்ன கட்சி நடத்தி வருகிறார் என்கிற விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்குச் சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி ராமசாமிக்கு அழைத்தன்பேரில் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.06.22 17:49:41 +0530

Principal District Munsif,(F.A.C),
Tittagudi.